| மாகாணம் | மாவட்டம் மற்றும் இலக்கம் | | Z புள்ளி | வேறு |
|---|---|---|---|---|
| | | | | |

| | |
|---|---|
| தேருநர் இடாப்பு பரிசோதனை சபை இலக்கம் | |
| நேர்முகப் பரீட்சை சபை இலக்கம் | |
| தொடர் இலக்கம் | |
| கணனி இலக்கம் | |

*எனது இலக்கம் - ඊඩී/15/02/12/01/02/2023(2024)*
*தேசிய கல்வியியல் கல்லூரிகள் கிளை,*
*கல்வி அமைச்சு,*
*இசுருபாய,*
*பத்தரமுல்ல.*
*2024/……/……*

*திரு/ திருமதி/ செல்வி.....................................................................*

*.......................................................................................................*

*.......................................................................................................*

***2021 மற்றும் 2022 க.பொ.த (உயர் தர) பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை - 2023 (2024)***

| பாடநெறி இலக்கம் | பாடநெறி | மொழி மூலம் |
|---|---|---|
| | | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் |

*2021 மற்றும் 2022 வருடத்தில் க.பொ.த (உ.த) பெறுபேறுகளின் அடிப்படையில் மூன்று வருட முன் சேவை கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியொன்றைத் தொடர்வதற்காக 02 பயிலுனர் குழுக்களை ஒரே தடவையில் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளல் 2023 (2024) எனும் தலைப்பில் 2024.03.15 திகதியுடைய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிக்கையின் பிரகாரம் தங்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்திற்கமைய மேற்படி பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெறும்.*

***திகதி - 2024........................................ மாதம் .................***

***நேரம் - மு.ப/ பி.ப. ....................................***

**இடம் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா.**

இக் கடிதத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் விடயங்களுக்கு அமைவாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் உரியவாறு குறித்த தினத்தில் குறித்த நேரத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு தெரிவித்துக்கொள்கின்றேன்.

- **இந்த நேர்முகப் பரீட்சையில் தங்களது தகைமைகளை பரீட்சிப்பதற்காகவே ஆகும் என்பதுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுவதனூடாக தகைமைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதாக இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.**
-

ஒப்பம்: பீ.ஜீ.ஐ.கே ஹேமாலி

பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி )

கல்விச் செயலாளருக்காக

.........................................................

பீடாதிபதி

***வவுனியா*** *தேசிய கல்வியியற் கல்லூரி*

நேர்முகப் பரீட்சை தொடர்பாக மேலதிக விபரங்களுக்காக தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

பீடாதிபதி

***வவுனியா*** *தேசிய கல்வியியற் கல்லூரி*

*பூந்தோட்டம், வவுனியா.*

தொலைபேசி இலக்கம் - *024-2222272 ,* .............................................

**இணைப்பு**

**விண்ணப்பதாரர்களுக்கான ஆலோசனைகள்**

*01. கீழே தரப்பட்டுள்ள அனைத்து சான்றிதழ்களதும் மூலப் பிரதிகள் மற்றும் அச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.*

*I. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம்*

*II. பிறப்புச் சான்றிதழ் (பதிவாளர் நாயகத்தினால் "இலவசமாக வழங்கப்பட்டது" என்பதாக குறிப்பிடப்பட்ட வழங்கப்பட்டுள்ள மூலப் பிரதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மேற்கோள் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)*

*III. தேசிய அடையாள அட்டை*

*IV. கல்விச் சான்றிதழ்கள் (இவ் இணைப்பில் இணைப்பு 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் இதற்காக கருத்தில் கொள்ளப்படும்)*

*V. நிரந்தர வதிவிடத்தை நிர்ணயம் செய்வதற்காக 2024.03.15 திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள்* ***மாத்திரம்****, தங்களுக்குள்ள பொருத்தப்பாட்டிற்கமைய முன்னிலைப்படுத்தல் வேண்டும்.*

*உரிய மூன்று வருடங்களில் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் மாத்திரம் வாக்களிப்புக்காக பதிவுசெய்யப்பட்டிருப்பின், மீதி ஒரு வருட,/ இரண்டு வருடங்களுக்குரிய வதிவிடத்தினை உறுதி செய்வதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஆவணங்கள்*
*(உ+ம் – உரிய நிரந்தர வதிவிடத்திற்குரிய கிராம சேவை உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடம் மற்றும் நடத்தைச் சான்றிதழ் (DS-04), ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை போன்றன)*

- *தாங்கள் உரிய காலப்பகுதியில் பெற்றோரல்லாத வேறு பாதுகாவலர் ஒருவரது நிரந்தர வதிவிடத்தில் இருந்திருப்பின். குறித்த பாதுகாவலருடன் இருந்த காலப்பகுதி, உரிய பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடம் மற்றும் நடத்தைச் சான்றிதழின் (DS-04) – 'வேறு விடயங்கள்' எனும் நிரலில் குறிப்பிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

- *ஏதேனுமொரு காரணத்தினால் மூன்று வருடத்திற்கும் அல்லது அதில் ஓரிரு வருடங்களுக்கு தேருநர் இடாப்பினூடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத பட்சத்தில், தேருநர் இடாப்பில் பதிவு செய்ய முடியாமை தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை, கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவிடம் மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழில் (DS-04) 'வேறு விடயங்கள்' எனும் நிரலில் குறிப்பிட்டு உரிய வதிவிடத்திற்குரிய பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் ஒப்பமிட்ட அதனை சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

**கருத்தில் கொள்ளப்படவேண்டியவை.**

- *நிரந்தர வதிவிடத்தை நிர்ணயம் செய்வதற்குரிய விபரங்கள் தேருநர் இடாப்பின் கணணிமயப்படுத்தப்பட்ட தரவுகளை உபயோகித்து பரிசோதிக்கப்படும் என்பதால், தேர்தல்*

அலுவலகங்களூடாக தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்வது அவசியமில்லை

- தாங்கள் நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக கொண்டுவரும் வதிவிடம் மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழிலேயே *(DS-04)* மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்களையும் குறிப்பிடமுடியும்.

02. பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு தடவைக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றிதழ்கள், அதிபர்/ பிரிவேணாதிபதி/ பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதி மற்றும் அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட புகைப் படப் பிரதிகள் ஒன்று வீதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. க.பொ.த (உ.த) பெறுபேறுச் சான்றிதழ். (உரிய பாடசாலையிலிருந்து இச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் போது பரீட்சைக்கு எத்தனையாவது தடவை தோற்றினீர்கள் என்பதைக் குறிப்பிட்டு அதனை அதிபர் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

II. க.பொ.த (உ.த) பரீட்சையின் Z புள்ளி குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுச் சான்றிதழ்

III. க.பொ.த (சா.த) பரீட்சையின் பெறுபேறுச் சான்றிதழ்/ ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சைப் பெறுபேறுச் சான்றிதழ்

IV. விசேட தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய சான்றிதழ்கள் (க.கொ – நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பாடநெறிக்குரியதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்கள் இதில் உள்ளடங்கும்.)

03. **வேறு சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள்**

I. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைச் சான்றிதழ்

II. கிராம உத்தியோகத்தரிடமிருந்து 06 மாதங்களுக்குள் பெற்றுக்கொண்ட வதிவிடம் மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழ். (DS-04)

III. பாடசாலை விடுகைச் சான்றிதழ் (மாணவர் செயலாற்றுகை)

IV. பாடநெறிக்குரிய திறமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்

V. வர்த்தமானி அறிவித்தலின் 9.7 பந்தியின் பிரகாரம் க.பொ.த (உ/த) பெறுபேறின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு “அரச இலவச கல்வி வரப்பிரசாதத்தின்” கீழ் நடைமுறையிலுள்ள அரசின் உயர் கல்வி நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சி பாடநெறி ஒன்றில்/ டிப்ளோமா பாடநெறி ஒன்றில் அல்லது உயர் டிப்ளோமா பாடநெறி ஒன்றில் உள்ளக மாணவராக பதிவு செய்திருப்பின் அதற்குரிய ஆவணங்கள்

VI. தாங்கள் நிகழ்நிலையூடாக (Online System) விண்ணப்பித்த விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதி (PDF)

**கருத்தில் கொள்ளப்படவேண்டியவை:-**

*விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றில் திருத்தம் மேற்கொள்ளும் போது ஏற்பட்ட பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக நிரந்தர வன் பிரதியொன்றை (PDF) பெற்றுக்கொள்ள இயலாத விண்ணப்பதாரர்கள் குறித்த பிரதி இல்லாமல் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது எந்த விதமான முரண்பாடுகளையும் தோற்றுவிக்காது. ஆகையால் தம்மிடம் குறித்த பிரதி இல்லாமை தொடர்பாக கல்வி அமைச்சில்/ தேசிய கல்வியியல் கல்லூரிகளில் விசாரிக்கத் தேவை இல்லை என்பது வலியுறுத்தப்படுகின்றது.*

04. **விண்ணப்பதாரரால் முன்னிலைப்படுத்தப்படவேண்டிய வெளிப்படுத்துகைப் படிவம்**

I. *வாழ்க்கைத் தரவு வெளிப்படுத்துகை அறிக்கை*

II. *திருமணமாகாதமை தொடர்பான வெளிப்படுத்துகை (கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் போது/ நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் போது திருமணம் பதிவுசெய்யப்படவில்லை என்பதாக/ விவாகரத்து பெற்றிருக்கவில்லை என்பதாக வெளிப்படுத்துகை)*

III. *அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலைகளில், அரசில் பதிவு செய்துள்ள பிரிவெனாக்களில் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமனம் ஒன்றை பெற்றிராத அல்லது தெரிவு செய்யப்பட்டிராமை தொடர்பான வெளிப்படுத்துகை*

IV. *தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து இடைவிலகிச் சென்றதில்லை என்பதாக, தொடரவில்லை என்பதாக, தொடர்ந்து நிறைவுசெய்யவில்லை என்பதாக, ஒழுக்காற்று காரணங்கள் அல்லது வேறு காரணங்களுக்காக தேசிய கல்வியியல் கல்லூரியொன்றிலிருந்து மாணவர் நிலை இரத்துச் செய்யப்படவில்லை என்பதற்கான வெளிப்படுத்துகை*

V. *அரச பல்கலைக்கழகமொன்றில்/ அரச பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.த) தகைமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் பாடநெறியொன்றைத் தொடர்வதற்காக **"அரச இலவசக் கல்வி வரப்பிரசாதத்தின்"** கீழ் <u>உள்ளக மாணவர் ஒருவராக பதிவுசெய்யவில்லை என்பதாகவும்,</u> அத்தகைய பாடநெறி ஒன்றினைத் தொடரவில்லை என்பதாகவும், அத்தகைய பட்டப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து பூர்த்தி செய்யவில்லை என்பதாகவும், <u>அத்தகைய பாடநெறி ஒன்றில் பதிவு செய்து</u> வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் பதிவினை இரத்துச் செய்திருத்தல் அல்லது வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர்/ நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதன் பின்னர்*

மேற்படி நிறுவனமொன்றில் உரிய பாடநெறியொன்றிற்காக பதிவு செய்து பின்னர் அதனை இரத்துச் செய்யவில்லை என்பதாக வெளிப்படுத்துகை அறிக்கை

மேற்கூறப்பட்ட வெளிப்படுத்துகை சரியாக பூரணப்படுத்தப்பட்டு சமாதான நீதவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டு கொண்டுவருதல் வேண்டும்.

05. நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்தப்படவேண்டிய சான்றிதழ்கள், முறையாக பூரணப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவங்கள் மற்றும் வெளிப்படுத்துகைப் படிவங்கள் யாவும் நேர்முகப் பரீட்சை தினத்திலேயே முன்னிலைப்படுத்துவது கட்டாயமாகும் என்பதுடன், விண்ணப்பதாரர்கள் அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் வர்த்தமானி அறிவித்தலின் 7.2 பந்தியின் பிரகாரம் தெரிவு செய்யும் செயற்பாடுகளின் போது அவை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

06. தங்களால் நேர்முகப் பரீட்சையில் முன்னிலைப்படுத்தப்படும் சகல சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் தொடர்பான பட்டியலொன்றினை தங்களது கையெழுத்தில் எழுதி அதனை நேர்முகப் பரீட்சையின் போது முன்னிலைப்படுத்தியதாக உறுதிப்படுத்தி நேர்முகப் பரீட்சை நிறைவில் நேர்முகப் பரீட்சை சபையிடம் கையளிக்கவேண்டும்.

07. பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தமது பெயர் அல்லது/ மற்றும் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் வேறுபாடுகள் காணப்படின் அது தொடர்பாக ஒரு சத்தியப் பிரமாணப் பிரகடனம் ஒன்றினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

08. தங்களால் சமர்ப்பிக்கப்படும் சகல ஆவணங்களதும் பிரதிகளின் கீழ் பகுதியில் தங்களது கையெழுத்தில் "இச் சான்றிதழ் மூலப் பிரதியின் உண்மையான பிரதியாகும் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்" என தெளிவாக எழுதி தாங்களே சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதிகள் மற்றும் அச் சான்றிதழ்களின் புகைப் படப் பிரதிகளை வெவ்வேறாக இரண்டு கோவைகளாக தயார்படுத்தி நேர்முகப் பரீட்சைக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.

09. தாங்கள் உரிய தினத்தில் உரிய நேரத்தில் ஆசிரியர் தொழிலுக்குப் பொருத்தமான ஆடையொன்றினை அணிந்து நேர்முகப் பரீட்சைக்கு கட்டாயமாக சமூகமளிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படத்தக்க நியாயமான காரணம் ஒன்றினால் குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற இயலாத பட்சத்தில், அவ் விடயம் தொடர்பாக உரிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மின்னஞ்சலூடாக தாமதமின்றி அறியப்படுத்துவது கட்டாயமாகும். (அதற்கு மேலதிகமாக தொலைபேசி அழைப்பொன்றினூடாக இது தொடர்பாக அறியப்படுத்துவது மிகவும் பொருத்தமானது.) உரிய தினத்தில் முன் கூட்டியே அறியப்படுத்தாமல் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாவிடின் குறித்த விண்ணப்பதாரருக்குப் பதிலாக உரிய மாவட்டத்தில் திறமை வரிசை அடிப்படையில் வேறு விண்ணப்பதாரர் ஒருவர் அழைக்கப்படுவார் என்பதுடன் சமூகமளிக்காத விண்ணப்பதாரர் தொடர்பாக மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறே எந்தவொரு காரணத்திற்காகவும்

*தாங்கள் விண்ணப்பித்துள்ள பாடநெறி மற்றும் கோரியுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.*

10. *நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தில் அதில் கலந்துகொள்ள முன்னர் இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இலக்கத்துடன் கூடிய தேருநர் (வாக்காளர்) இடாப்பினை பரிசோதிக்கும் சபையில் தமது தரவுகளைப் பரிசோதிப்பதற்காக கலந்துகொள்வது கட்டாயமாகும்.*

11. *நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அழைக்கப்பட்ட மாத்திரத்தில் தாங்கள் ஏதேனுமொரு பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்டதாக அல்லது அதற்குரிய தகைமைகளை பெற்றுள்ளதாக ஒருபோதும் கருத்தில் கொள்ளலாகாது. முதலாவது நேர்முகப் பரீட்சைக்கமைய போதியளவு தகைமைகள் காணப்படும் பட்சத்தில் மாத்திரம் இரண்டாம் தடவை தகைமைகளைப் பரிசோதிப்பதற்கும் அதற்கமைவாக உரிய கல்வியியல் கல்லூரியில் பதிவினை மேற்கொள்வதற்காகவும் தாங்கள் அழைக்கப்படுவீர்கள். இருப்பினும் மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு ஆவணம் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பொய்யானவை அல்லது மோசடியாக தயார்படுத்தப்பட்டவை என வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் தாங்கள் பயிற்சியிலிருந்து/ சேவையிலிருந்து அகற்றப்படுவீர்கள் என்பதுடன் அரச சேவையில் வேறு எந்தவொரு நியமனத்தைப் பெற்றுக்கொள்ளவும் தகைமை பெறமாட்டீர்கள் என்பது வலியுறுத்தப்படுகின்றது.*

## உடற்கல்வி பாடநெறியைத் தெரிவு செய்தவர்கள் கவனிக்க வேண்டியவை....

உடற்கல்வி பாடநெறித் தெரிவுக்காக நேர்முகப்பரீட்சைக்கு வருகை தருகின்ற பரீட்சார்த்திகள் தங்களின் உடற்தகுதியைப் பரீட்சிப்பதற்கான பிரயோகப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டி இருப்பதால் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

- பிரயோகப் பரீட்சைக்காகத் தோற்றும் போது தங்களின் உடற்தகுதியை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற வைத்திய அறிக்கையானது அரசவைத்தியசாலை வைத்தியரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். தனியார் வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கை எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (சுகாதார அமைச்சு-1246 சுற்றறிக்கையின் பிரகாரம்)

- மைதானத்தில் பிரயோகப் பரீட்சைக்குத் தோற்றும் போது பொருத்தமான ஆடை அணிந்து வர வேண்டியது கட்டாயமானதாகும்.

- குறிப்பாக ஆண் பரீட்சாத்திகள் கை இல்லாத டீ சேட் (விளையாட்டின் போது அணிகின்ற பெனியன்) மற்றும் கட்டைக் காற்சட்டை (Sport Shorts) அணிந்து வரவேண்டும்.

- இந்தப் பிரயோகப்பரீட்சையானது தங்களின் உடற்தகுதியைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே நடாத்தப்படுகின்றது என்பதையும் இதில் பெறப்படுகின்ற புள்ளிகள் உடற்கல்விப் பாடநெறியை தொடர்வதற்கான தெரிவிற்கு கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தாங்கள்

சமர்ப்பிக்கின்ற வினையாட்டு சான்றிதழ்களுக்காக வழங்கப்படுகின்ற புள்ளிகளின் ஒழுங்கு வரிசையிலேயே குறித்த பாடநெறிக்கான பயிலுநர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதையும் கவனத்திற்கொள்ளவும். பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான உடற்தகுதி மட்டத்தை காட்டியிருத்தல் வேண்டும்.

- கீழே உள்ள அறிவுரைகளை நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு விளையாட்டுத்தகைமைச் சான்றிதழ்களை மதிப்பீட்டிற்காக முன்வைத்தல் வேண்டும்.

- 2021 க.பொ.த(உயர்தர)ப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்காக 2017.01.01 திகதி தொடக்கம் 2021.12.31 ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டுச் சான்றிதழ்களும் 2022 க.பொ.த(உயர்தர)ப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பித்தவர்களுக்காக 2018.01.01 ம் திகதி தொடக்கம் 2022.12.31 ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டுச் சான்றிதழ்களும் மட்டுமே இதற்கு செல்லுபடியாகும்.

- (கவனிக்க வேண்டியவை - இக்கால கட்டத்திற்கு முன்போ பின்போ வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குவது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. என்பதோடு முன்வைக்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் உண்மைத்தன்மைக்காக அதற்குரிய நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- அக்காலப்பகுதிக்குரிய விண்ணப்பதாரிகளின் உயரிய திறன் ஆற்றல் காண்பிக்கப்பட்டுள்ள விளையாட்டின் வெற்றிச் சான்றிதழ்கள் மூன்றிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படுவதோடு நேர்முகப் பரீட்சைத் தினத்தில் உரிய அனைத்து சான்றிதழ்களையும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும். நேர்முகப்பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் ஒப்படைக்கப்படும் எந்தச்சான்றிதழ்களும் புள்ளிகள் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

- சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பெற்ற வெற்றிகள்/பங்குபற்றியதற்கான சான்றிதழ்கள் மற்றும் அதில் தேசிய அளவிலான பங்குபற்றுதல்கள் தொடர்பான தன்மையை உறுதிபடுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- உரிய தேசிய அணிக்கான தெரிவு செய்ய சோதிப்பதற்கான அழைப்புக் கடிதம் மற்றும் தேர்வு செய்யப்பட்டதாக தேசிய சங்கம் அளித்த கடிதத்தை நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம்.


  - பங்குபற்றிய ஏனைய அங்கத்தவர்கள்/அணிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
  - குறித்த போட்டியில் பங்கு பற்றியதற்கான அமைச்சரவையின் அனுமதிக்கடிதம்
  - பெற்றுக்கொண்ட வெற்றி தொடர்பான சான்றிதழ்கள்

- குறித்த போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியதை தெரியப்படுத்துவதற்கு அவசியமான கடிதங்கள்
- குறித்த போட்டியில் பங்கு பற்றியதை சான்றுப்படுத்தக் கூடிய ஆவணங்கள் (கடவுச்சீட்டு போன்றவை ........)

- தேசிய, மாகாண,மாவட்ட,வலய மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றமைக்காக பெறப்பட்ட சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் போது, அச்சான்றிதழ்களில் ‘மட்டம்’ தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- உள்ளூர் விளையாட்டுச் சங்கங்கள் ஊடாக பெறப்பட்டச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் போது. குறித்த சங்கங்கள் கல்வி அமைச்சினாலோ விளையாட்டு அமைச்சினாலோ பதிவுசெய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:- தகமை பெறுவதற்கு க.பொ.த(சாதாரனதர)ப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது என்பதை கவனத்தில் கொள்க.

<u>நேர்முகப் பரீட்சை நடைபெறும் நிறுவனத்திற்கு வருகை தரவேண்டிய பாதை</u>




**குறிப்பு:- இணைக்கப்பட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்கவும்.**